# வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களம்

# பயிற்சிப் பரீட்சை 07 - தரம் 5

தயாரிப்பு :- திரு. பா. பாலசுந்தரம். (ஆசிரிய ஆலோசகர்)
(வலயக்கல்வி அலுவலகம், வவுனியா வடக்கு)

## 2024 ஆம் ஆண்டு தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான மாதிரிப் பரிட்சை - 07 பகுதி I

| | |
|---|---|
| பாடசாலை ................................................................................................ | 1 மணித்தியலம் |
| பெயர் ................................................................................................................. | சுட்டெண் ....................................... |

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்**

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடையை இவ்வினாத்தாளிலேயே தருக.
- ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வளங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 01 | |
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |


| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்**<br>புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T |
| **இரண்டாவது பரீட்சகர்**<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்**<br>மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப் படுத்துகின்றேன். . | V/II/T/EMF |
| **பிரதான பரீட்சகர்**<br>மேற்பார்வை செய்ததற்கிணங்க இறுதிப் புள்ளிகள் சரியாகும் | V/II/T/CH |



kalvi.lk

அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்து வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

கட்டத்தினுள் தரப்பட்டுள்ளவற்றை கவனித்து 1 ஆம் வினாவிற்கான சரியான விடையைத் தெரிவு செய்க.

1. 


A. கட்டத்தினுள் திண்ம உருக்கள் காணப்படுகின்றன.

B. கட்டத்தினுள் தள வடிவங்கள் காணப்படுகின்றன.


C. கட்டத்தினுள் தள வடிவங்களும் திண்ம உருக்களும் மட்டும் காணப்படுகின்றன.

D. கட்டத்தினுள் கணிதச் செய்கைக்கான குறியீடுகள் காணப்படுகின்றன.

மேற்படி கூற்றுக்களில் சரியான ஒரு கூற்றும் தவறான ஒரு கூற்றும் முறையே.

1) A, D 2) B, C 3) C, D

2 ஆம் வினாவில் கட்டத்தினுள் தரப்பட்டுள்ள உரு தொடர்பாக தரப்பட்டுள்ள கூற்றுக்களினை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

2. 

A. இப்பூவானது ஒரு நீர்த்தாவரமாகும்

B. இது ஐந்து இதழ்கள் கொண்ட ஒரு பூவாகும்

C. இது அனேக இதழ்கள் கொண்ட ஒரு பூவாகும்

D. இது ஒரு கொத்துப் பூவாகும்

மேற்படி கூற்றுக்களில் தவறான ஒரு கூற்றாக அமைவது

1) A 2) B 3) C

3. இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

தாதி - வைத்தியசாலை எனின் விவசாயி ..............

1) வயல் 2) மண்வெட்டி 3) மரக்கறி


4. இங்கு தரப்பட்டுள்ள கூடுகளிலுள்ள ஒவ்வொரு உருவிற்கும் ஒவ்வொரு பெறுமதி உள்ளது. அவ்வுருக்களின் பெறுமதிகளின் கூட்டுத்தொகைகள் நிலைக்குத்தாகவும் கிடையாகவும் தரப்பட்டுள்ளன. ⊗ இன் பெறுமதி எவ்வளவு?

1) 1
2) 2
3) 3

| | | | |
|---|---|---|---|
| ⊡ | ◈ | ⊠ | **8** |
| ⊗ | ⊗ | ⊡ | **7** |
| **5** | **3** | **7** | |

5. ஐந்து வெவ்வேறு நிறங்கள் பூசப்பட்ட கனவுருக்கள் இணைக்கப்பட்டுள்ளவாறு மேசை மீது வைக்கப்படுள்ளனவெனின் எம்மால் அவதானிக்கக் கூடிய முகங்களின் எண்ணிக்கை யாது?

1) 17 2) 20 3) 22




kalvi.lk


6. சித்திரா படம் ஒன்றக் காட்டி “ இப்படத்தில் இருப்பவரின் அப்பாவே எனது அப்பாவின் அப்பாவும் ஆவார் ” எனக்கூறினாள். அப்படியாயின் படத்தில் இருப்பவர் கமலிக்கு என்ன உறவு முறை?


1) மாமா 2) பாட்டன் 3) பெரியப்பா


7. சிம்மம் எனும் சொல் எழுதப்பட்டிருக்கும் விடை எது ?


1)  2)  3) 

8. முதலில் தரப்பட்டுள்ள கடதாசி அட்டையை புள்ளிக் கோட்டின் வழியே முன்னோக்கி மடிக்கும்போது தோன்றும் உரு எது ?



1) 


2) 


3) 


9. ஒரு குளிர்பான போத்தல் 4 பேரை உபசரிக்கப் போதுமானது எனின் 37 பேரை உபசரிக்கத் தேவையான குளிர்பானப் போத்தல்களின் எண்ணிக்கை யாது ?

1) 11 2) 10 3) 9

10. கீழே தரப்பட்டு தொகுதியை அவதானித்து வெற்றிடத்தில் வரவேண்டியதைத் தெரிவு செய்க




1) 7
2) 8
3) 9

11. தோட்டமொன்றில் தோடை மரத்திற்கு வலப்புறம் மாமரமும், பலாமரத்திற்கு வலப்புறம் மாதுளை மரமும் , மரமுந்திரிகை மரத்திற்கு வலப்புறம் தோடை மரமும் , பலாமரத்திற்கு இடப்புறம் மாமரமும் என்றவாறு பழமரங்கள் நடப்பட்டிருந்தன. இதன்படி நடுவில் நடப்பட்டிருந்த மரம் எது ?

1) மாமரம் 2) பலாமரம் 3) தோடைமரம்


12. ஒரு சோடி வெள்ளைப் பூக்களுக்கு அடுத்து மூன்று சிவப்பு நிறப்பூக்கள் இருக்குமாறு நேரான அலங்காரம் ஒன்று செய்யப்பட்டது. இதில் ஆரம்பத்திலும் இறுதியிலும் வெள்ளை நிறப்பூக்கள் சோடியாக இருப்பதோடு 14 வெள்ளை நிறப்பூக்களும் உள்ளனவெனின் இங்குள்ள சிவப்பு நிறப்பூக்கள் எத்தனை ?

1) 15 2) 18 3) 21



kalvi.lk

13. □ = 6, △ = 4 , ○ = 2 ஆயின் பின்வருவனவற்றுள் எதன் பெறுமானம் அதிகமாகவிருக்கும் ?


1)



2)



3)




- கீழுள்ள தகவல்களுக்கேற்ப 16, 17 ஆகிய வினாக்களுக்கு விடையைத் தெரிவு செய்க

| நாள் | ஜனவரி -31 | பெப்ரவரி -28 | மார்ச் - 31 | ஏப்ரல் - 30 | மே - 31 |
|---|---|---|---|---|---|
| எண்ணிக்கை | 31 | 59 | 90 | .......... | 151 |

14. ஏப்ரல் 30 இற்குப் பொருத்தமான எண் யாது ?
1) 119 2) 120 3) 121

15. எண் 131 இற்குப் பொருத்தமான திகதி யாது ?
1) மே 9 2) மே 10 3) மே 11

16. சிவப்பு நிறம் பூசப்பட்ட சதுரமுகியை புள்ளிக் கோடுகளின் வழியே வெட்டும் போது கிடைக்கும் சிறிய சதுரமுகிகளிலுள்ள சிவப்பு நிறம் பூசப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை யாது ?
1) 12 2) 16 3) 20




17. பின்வருவனவற்றில் எது ஒரே திசையில் சுழலும் இரு சக்கரங்களைக் கொண்ட தொகுதியாகும் ?


1)



2)



3)



18. தரப்பட்டுள்ள கூற்றுக்குப் பொருத்தமான வாக்கியத்தைத் தெரிவு செய்க

**கூற்று** :- வார நாட்களில் மாத்திரம்

1) வாரத்திலுள்ள எல்லா நாட்களிலும்

2) வாரத்திலுள்ள ஒரு நாளில் மாத்திரம்

3) சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை தவிர ஏனைய நாட்களில்


kalvi.lk

19. முயலொன்று ஒருமுறை 1m ( 100 cm) முன்னோக்கிப் பாயும்போது 10 cm பின்னோக்கி வருகிறது. எனின் தொடக்கத்திலிருந்து 10 m தூரத்தைக் கடப்பதற்கு முயல் எத்தனை தடவை பாய வேண்டும் ?

1) 10 2) 11 3) 12

20. ஒரு அலங்கார மின் விளக்குக் கோர்வையில் பச்சை, நீலம் ஆகிய இரு மின் விளக்குகள் உள்ளன. இவற்றில் நீல நிற மின் விளக்கு 6 செக்கனுக்கு ஒரு தடவை ஒளிர்கின்றது. இரண்டும் ஒன்றாக ஒளிர்ந்த பின் 12 செக்கன்களுக்கு பின்னர் மீண்டும் இரண்டும் ஒன்றாக ஒளிருமாயின் பச்சை மின் விளக்கு எத்தனை செக்கனுக்கு ஒரு தடவை ஒளிர்கினறது?

1) 4 செக்கன்கள் 2) 5 செக்கன்கள் 3) 7 செக்கன்கள்

21. நபீலின் ஓட்ட வேகம் 12 செக்கன்களுக்கு 100 மீற்றர் ஆகும். சம்சன் 200 மீற்றரை 22 செக்கன்களில் ஓடக்கூடியவன். சமீர் 3 செக்கன்களில் 24 மீற்றர் ஓடக்கூடியவன். எனின் இவர்களிடையே ஓட்டப்போட்டி நடைபெற்றால் 1, 2, 3 ஆகிய இடங்களைப் பெறக்கூடியவர்கள் முறையே

1) நபீல் , சம்சன் , சமீர்
2) சம்சன் , நபீல் , சமீர்
3) சமீர் , நபீல் , சம்சன்

22. நாளென்றுக்கு இரண்டு நிமிடங்கள் பிந்தி ஓடும் கடிகாரமொன்று மார்ச் மாதம் முதலாம் திகதி சரியான நேரம் மு.ப 6.00 மணிக்கு சீர் செய்து வைக்கப்பட்டது எனின் மார்ச் மாதம் 26 ஆம் திகதி அது காட்டும் நேரம் யாது?

1) காலை 5.10 2) காலை 5.08 3) காலை 5.06

23. ஒரு விருந்தில் கலந்து கொண்ட 36 பேரில் 22 பேர் ஐஸ்கிறீமையும் 17 பேர் யோகட்டையும் உண்டனர் 5 பேர் ஐஸ்கிறீமையோ யோகட்டையோ உட்கொள்ளவில்லையெனின் ஐஸ்கிறீம், யோகட் ஆகிய இரண்டையும் உண்டவர்கள் எத்தனை பேர்?

1) 6 பேர் 2) 8 பேர் 3) 13 பேர்

24. A இலிருந்து B இற்குச் செல்ல இச்சில்லு இரு தடவைகள் சுழலுமாயின் A இலிருந்து B வரையிலான தூரம் எவ்வளவு ?

1) 2m 2) 3m 3) 4m





kalvi.lk

25. சம்சனின் வயது 9 ஆகும். சம்சனின் அண்ணனின் வயது சம்சனின் வயதின் மும்மடங்கிலும் 6 வயது குறைவாகும் சம்சனின் அண்ணனின் வயது எத்தனையாகும்?

1) 21 2) 27 3) 33

26. ஒரு வரிசையில் இந்திரன் நடுவில் நின்று கொண்டிருந்தான். இதன்படி அவ்வரிசையில் நின்று கொண்டிருந்தவர்களின் எண்ணிக்கையாக இருக்கக் கூடியது எது ?

1) 16 2) 21 3) 28

- பின்வரும் விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு 29,30 ஆகிய வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்க

காடொன்றில் இருந்த மூன்று மரங்களில் பறவைகள் பின்வருமாறு அமர்ந்திருந்தன.

- பாலை மரத்திலிருந்த பறவைகளின் மும்மடங்கான பறவைகள் கருங்காலி மரத்தில் அமர்ந்திருந்தன.
- பாலை மரத்திலும் கருங்காலி மரத்திலும் அமர்ந்திருந்த பறவைகளின் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையான பறவைகள் முதிரை மரத்தில் அமர்ந்திருந்தன.
- பாலை மரத்திலிருந்து இருந்து ஒரு பறவை கருங்காலி மரத்திற்குச் சென்றபோது பாலை மரத்திலிருந்த பறவைகளின் எண்ணிக்கை 2 ஆகும்.

27. முதிரை மரத்திலிருந்த பறவைகளின் எண்ணிக்கை யாது ?

1) 6 2) 8 3) 12

28. மூன்று மரங்களிலும் இருந்த பறவைகளின் மொத்த எண்ணிக்கை யாது ?


1) 27 2) 24 3) 18

29. தந்தையும் இரு புதல்வர்களும் ஒன்றாக தமது வீட்டிலிருந்து புறப்பட்டு மூன்று மணித்தியாலங்களில் 9 km தூரம் நடந்து சென்றனர். ஒரு மணித்தியாலத்தில் தந்தை சென்ற தூரம் எவ்வளவு ?

1) 1 km 2) 3km 3) 9 km


kalvi.lk

- பின்வரும் விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு 30, 31 ஆகிய வினாக்களுக்கு சரியான விடை தருக
- ஒரு நேர்கோட்டில் அமைந்துள்ள A , B , C , D , E ஆகிய நகரங்களின் அமைவிடங்களின் படம் தரப்படுகிறது.




30. நகரம் A இலிருந்து பயணத்தை ஆரம்பித்த ஒருவர் நகரம் D வரை சென்று மீண்டும் நகரம் A அடைந்தார் எனின் சென்ற மொத்தத் தூரம் எவ்வளவு ?

    1) 44 km  2) 46 km  3) 48 km

31. நகரம் B இலிருந்து நகரம் D இற்கான தூரத்திற்கும் , நகரம் C இலிருந்து நகரம் E இற்கான தூரத்திற்கும் இடையிலான வித்தியாசம் எவ்வளவு ?

    1) 2 km  2) 3 km  3) 4 km

- பாடல் வரிகளைக் கொண்டு 33, 34 ஆகிய வினாக்களுக்கான விடைகளைத் தெரிவு செய்க.

சின்னஞ்சிறு வில்லாய்க் கண்டதம்மா – பின்னர்ச்
செம்பொற் குடம்போலே தோன்றுதம்மா
என்ன அதிசயம் பாராயம்மா - ஈதோர்
இந்திர சாலமோ கூறாயம்மா.

32. இங்கு கண்கட்டு வித்தை எனும் கருத்தைத் தருவது எது ?

    1) அதிசயம்  2) செம்பொற் குடம்  3) இந்திரசாலம்

33. இங்கு குடம் பின்வருவனவற்றுள் எதனால் செய்யப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது ?

    1) பொன்  2) செம்பு  3) வில்

34. m , b , x ஆகிய எழுத்துக்களை முகம் பார்க்கும் கண்ணாடிக்கு முன்னால் பிடிக்கும் போது அவற்றில் ஒரு எழுத்து வேறோர் ஆங்கில எழுத்தாக கண்ணாடியில் தெரிகிறது. அவ்வெழுத்து யாது?

    1) m  2) b  3) x

35. பாடலொன்றின் வரிகள் ஒழுங்கின்றித் தரப்படுகின்றன.

    A – மஞ்சள் ஒளியில் உசாராவோம்  B – உவக்கும் பச்சை ஒளிகண்டால்

    C - உவகை கொண்டு புறப்படுவோம்  D – சிவப்பொளி கண்டால் நின்றிடுவோம்

    இது அர்த்தமுள்ளதாக அமையுமாறு ஆங்கில எழுத்தக்களை ஒழுங்குபடுத்தம் போது அமையும் விதம்

    1) DCAB  2) ACDB  3) DABC


kalvi.lk

36. விழா ஒன்றிற்காக 24 மீற்றர் தூரத்தில் 3 மீற்றர் சம இடைவெளியில் முதலில் சிவப்பும் அதைத் தொடர்ந்து பச்சை , நீலம் என்ற ஒழுங்கில் மூன்று நிறக்கொடிகள் நேர் கோட்டில் கட்டப்பட்டிருந்தது. இங்கு கட்டப்பட்டிருந்த கொடிகளில் நடுவில் உள்ள கொடி எந்த நிறமுடையது?

1) சிவப்பு 2) பச்சை 3) நீலம்

37. நான்கு மாணவர்களின் நிறைகள் தரப்படுகின்றன


அருண் = 47kg அமல் = 42kg அரவிந்த் = 45kg அழகேஸ் = 48 kg

இவர்களின் நிறைகளை இறங்கு வரிசைப்படுத்தும்போது இரண்டாவதாக வருபவர்

1) அருண் 2) அரவிந்த் 3) அழகேஸ்

38. படத்தில் உள்ளவாறு தட்டு A இல் சவர்க்கராமும் தட்டு B இல் 500g படியும் இடப்பட்டுள்ளன இதன் படி சவர்க்காரத்தின் நிறை

1) 500g இலும் குறைவாகும்
2) 500g இலும் அதிகமாகும்
3) 500g இற்குச் சமனாகும்




39. ஓரிடத்திலிருந்து ஒரே நேரத்தில் கிசான் மணிக்கு 10 கிலோமீற்றர் வேகத்தில் வடக்குத்திசை நோக்கியும், இமான் மணிக்கு 15 கிலோமீற்றர் வேகத்தில் தெற்குத்திசை நோக்கியும் ஒரே நேர் கோட்டில் ஈருருளியில் புறப்பட்டுச் சென்றனர். இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் இருவருக்கும் இடையிலான தூரம் எவ்வளவு

1) 30 கிலோமீற்றர் 2) 40 கிலோமீற்றர் 3) 50 கிலோமீற்றர்

40. A,B,C என மூன்று கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றில் ஒரே கருத்தைத் தருகின்ற இரண்டு கூற்றுக்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க

A - தங்கையிடம் இருந்த பணம் என்னிடம் இருந்த பணத்தின் இரு மடங்காகும்.

B - என்னிடமும் தங்கையிடமும் இருந்த பணம் தங்கையிடம் இருந்த பணத்தின் மும்மடங்காகும்

C - என்னிடம் இருந்த பணம் தங்கையிடம் இருந்த பணத்தின் அரைவாசியாகும்

1) A, B 2) A, C 3) B, C


kalvi.lk

# வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களம்

# பயிற்சிப் பரீட்சை 07 - தரம் 5

தயாரிப்பு :- திரு. பா. பாலசுந்தரம். (ஆசிரிய ஆலோசகர்)
(வலயக்கல்வி அலுவலகம், வவுனியா வடக்கு)

## 2024 ஆம் ஆண்டு தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான மாதிரிப் பரிட்சை - 07 பகுதி II

| | |
|---|---|
| பாடசாலை .................................................................................................. | 1 மணித்தியலம் 15 நிமிடங்கள் |
| பெயர் ......................................................................................................... | சுட்டெண் ....................................... |

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்**

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடையை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
- மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களில் விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்

Education கல்வி அதியாபன

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 01 | |
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்** புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T |
| **இரண்டாவது பரீட்சகர்** முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்** மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப் படுத்துகின்றேன். . | V/II/T/EMF |
| **பிரதான பரீட்சகர்** மேற்பார்வை செய்ததற்கிணங்க இறுதிப் புள்ளிகள் சரியாகும் | V/II/T/CH |



kalvi.lk

01. பின்வரும் பந்தியை வாசித்து (1) தொடக்கம் (6) வரையான வினாக்களுக்கு விடை தருக.

நாம் நம் பண்டைய விளையாட்டுக்களை முற்றிலும் மறந்து விட்டோம். அவற்றில் ஒன்று தான் கெந்தி விளையாட்டு. ஓடுபவர்களை ஒற்றைக்காலால் கெந்தி அடித்துத் தொடுவது கெந்தி விளையாட்டாகும். இது சிறுவர்களுக்கு சிறந்த உடற்பயிற்சி ஆகும். கெந்தி விளையாட்டு பிள்ளைகளின் உடலுக்குப் புத்துணர்ச்சியை அளித்து, அவர்களின் சோம்பேறித்தனத்தைக் குறைக்கிறது.

1) இவ்விளையாட்டின் மூலம் சிறுவர்களிற்குக் கிடைக்கும் பயன் யாது?

……………………………………………………………

2) பந்தியில் உள்ள பெயராகவும் வினையாகவும் வரக்கூடிய சொல் ஒன்றை எழுதுக?

……………………………………………………………

3) ''மறந்து விட்டோம்'' என்பதை எதிர்காலத்தில் எழுதுக?

………………………………

4) நவீன என்பதன் எதிர்கருத்துச் சொல்லை பந்தியிலிருந்து எழுதுக.

………………………………

5) தன்மைப் பன்மைச் சொல் ஒன்றைப் பந்தியிலிருந்து எழுதுக.

………………………………

6) இப்பந்திக்கு மிகவும் பொருத்தமான ஒரு தலைப்பைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1) சிறுவர்களுக்கான சிறந்த உடற்பயிற்சி
2) பண்டைய விளையாட்டுக்களின் முக்கியத்துவம்
3) கெந்தி விளையாட்டும் அதன் பயன்களும்

02. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

1) ……………… ( வேலை / வேளை ) விடயமாக வெளியூர் சென்றிருந்தேன்.
2) …………….. (அரை / அறை ) வாசித் தூரத்தைக் கடந்து விட்டோம்.

03. வாக்கியங்களில் உள்ள இடைவெளிகளை அடைப்பினுள் உள்ள இரட்டைக்கிளவியைக் கொண்டு பூர்த்தி செய்க.

(கிடுகிடு, பலபல, மடமட, குடுகுடு, கலகல)

1) தாத்தா …………………….. என நடந்தார்.

2) காவற்காரன் ………………… என நீரைக் குடித்தான்.

04. கீழே தரப்பட்ட வெற்றிடத்தில் பொருத்தமான சொல்லை எழுதி பழமொழியைப் பூரணப்படுத்துக.

1) …………………………….. நெஞ்சு குறுகுறுக்கும்.

2) ஐந்தில் ……………….…. ஐம்பதில் வளையுமா?

05. கீழுள்ள ஆண்பாற் சொற்களுக்குரிய பெண்பாற் சொற்களை புள்ளிக்கோடுகளில் எழுதுக.

1) வீரன் :- ……………………………………………

2) சேவகன் :- ……………………………………………


kalvi.lk

06. பின்வரும் வாக்கியங்களை ஒருமை வாக்கியங்களாக எழுதுக.
1) குயில்கள் இனிமையாகக் கூவின.

.......................................................................................................

2) மரங்கள் காற்றில் ஆடி அசைந்தன.

……………………………………………………………………………

07. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து புள்ளிக்கேட்டில் எழுதுக.

1) அவன் படிக்கிறான். இங்கு அவன் என்பது …………................
(படர்க்கை ஒருமை / முன்னிலை பன்மை) ஆகும்.

2) பாடுவேன் என்பது …………………… (எதிர்கால ஒருமை/ எதிர்கால பன்மை) வினைச் சொல் ஆகும்.

3) இன்று நாம் படிக்க ………………… (வேண்டியது/ வேண்டியன) யாவை?

08. கீழேயுள்ள சொற்றொடருக்குரிய தனிச்சொல்லை எழுதுக.

தன்னைப் பற்றித் தானே எழுதும் சரிதை ……………………………………..

09. கறுப்புப் பூனை வெள்ளைப் பாலை விரைவாக குடித்தது. இவ்வாக்கியத்திலுள்ள எழுவாய் அடைமொழியை எழுதுக.

………………………………………………

10. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக

பண்புகள்/கூறலானார்/ஐந்து/பற்றிக்/பென்சிலின்

………………………………………………………………………………………………………

11. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக

1) Toothbrush :- ………………………………..

2) Hospital - …………………………….............

12. பின்வரும் படத்தில் உள்ள பொருளினதும், தமிழ்ச் சொல்லினதும் ஆங்கிலச் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக

1)  ………………………...................

2) நெருப்பு :- …………………………………

13. கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களுக்கு பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

1) There are ……………… ( flowers / flower )

2) Parrot …………….. ( are / is ) flying.

14. 'ஷிஸ்யயா'' எனும் சிங்களச் சொல்லின் தமிழ்க் கருத்தை எழுதுக.

…………………………………......................................


kalvi.lk

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழில் எழுதுக
உங்களுக்குப் பால் வேண்டுமா?
……………………………………………………………………………………

- **விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக**

16. பெட்டியிலுள்ள உள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி அமைக்கத்தக்க மிகப்பெரிய எண்ணின் எண் பெயரை எழுதுக
…………………..........................................................................................

| | |
|---|---|
| 7 | 9 |
| 1 | 5 |

17. 4726, 7541, 5648, 1894 ஆகிய எண்களில் 4 எனும் இலக்கத்தினால் காட்டப்படும் பெறுமதி 4000 ஆகவுள்ள எண் எது? ……………..................

18. பின்வரும் தொடரின் அடுத்து வரும் இரு உரோம இலக்கங்களையும் எழுதுக

V, VIII, XI, XIV, …………., ……………

19. பயணத்தை ஆரம்பிக்கும்போது ஒரு வாகனத்தின் மானியில் இலக்கங்கள் பின்வருமாறு பதியப்பட்டிருந்தன. வாகனம் மேலும் 245 கிலோமீற்றர் சென்ற பின்னர் மானியில் பதிவாகும் இலக்கங்களை வெற்றுக் கூடுகளில் எழுதுக.


| | | | | |
|---|---|---|---|---|
| 2 | 1 | 4 | 9 | 7 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

20. ஒரு பாத்திரத்தில் $1l657ml$ குளிர்பானம் உள்ளது. அக்குளிர்பானம் சம கொள்ளளவு கொண்ட ஐந்து போத்தல்களில் நிரப்பப்பட்டது.
1) இரு போத்தல்களில் உள்ள குளிர்பானத்தின் அளவு யாது? ………………………

2) எஞ்சியுள்ள குளிர்பானத்தின் அளவு யாது? ...............................................

21. இவ்வுருவில் நிழற்றப்படாத பகுதி முழு உருவில் என்ன பின்னம்?
………………………..................................




22. $\frac{4}{10}$ பின்னத்தை தசம எண்ணாக எழுதுக. ……………………

23. வட்டத்திலுள்ள எண்களில் 4 இன் மடங்குகளைத் தெரிவு செய்து ஏறு வரிசையில் எழுதுக? ……………………………………………………………………

30 36
42 46
24 48

24. கொழும்பிலிருந்து சில நகரங்களுகிடையிலான தூரம் தரப்படுகிறது இதைப் பயன்படுத்தி புத்தளத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான தூரத்தைக் காண்க.
………………………………..km





kalvi.lk

25. தந்தையொருவர் தனது இரு பிள்ளைகளுக்கும் 50 மாபிள்களை வழங்கினார் பிள்ளைகள் இருவரும் தமக்கிடையே சமமாக மாபிள்களைப் பிரித்த பின்னர் 8 மாபிள்கள் எஞ்சின எனின் ஒரு பிள்ளைக்குக் கிடைத்த மாபிள்கள் எத்தனை ?

..........................................................................................................

26. ராஜன் தனது கிரமாத்திலிருந்து நகரத்திற்கு முற்பகல் 9.15 இற்குப் புறப்பட்டு நகரத்தை அடைவதற்கு 2 மணித்தியாலம் 30 நிமிடங்கள் எனின் ராஜன் நகரத்திற்குச் சென்ற நேரம் யாது ?

..................................................................................

27. 80 தோடம்பழங்கள் கொண்ட குவியலில் $\frac{1}{4}$ பழுதடைந்ததன் காரணமாக அகற்றப்பட்டது. மீதியாக இருந்த நல்ல தோடம்பழங்கள் மூன்று நண்பர்கர்களிடையே சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

1) குவியலில் இருந்த நல்ல தோடம்பழங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?
..................................................................
2) ஒரு நண்பனுக்குக் கிடைத்த தோடம்பழங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?
..................................................................

28. 6 மனிதர் 10 நாட்களில் செய்யும் வேலையை 4 மனிதர் எத்தனை நாட்களில் செய்து முடிப்பர்.? ..................................................


29. ஒரு பழக்கடையில் விற்பனைக்கு வைக்கப்பட்ட பழங்கள் பற்றிய தகவல்கள் அருகிலுள்ள வரைபில் காட்டப்பட்டுள்ளன.

கடையில் உள்ள தோடம்பழங்களின் எண்ணிக்கை விளாம்ழங்களின் எண்ணிக்கையை விட 15 அதிகமாகும்

1) மாம்பழங்களின் எண்ணிக்கை விளாம்பழங்களின் எண்ணிக்கையை விட எத்தனை அதிகமாகும்.

......................................................

2) கடையிலுள்ள பழங்களின் மொத்த எண்ணிக்கை யாது ?
................................




பொருத்தமான விடையைத் தெரிவு செய்க


30. பின்வருவனவற்றுள் ஐந்து இதழ் பூ அல்லாதது எது?
1) தாமரை 2) அலரிப்பூ 3) பாகல்

31. கடிகாரப் பறவைகள் என அழைக்கப்படும் பறவைகள்?
1) காகம், ஆந்தை 2) சேவல், கிளி 3) காகம், சேவல்


kalvi.lk

32. கரைவலையில் மீன் பிடிக்கும் போது, வலையில் இருந்து மீனை எடுத்துப் போடும் கூடையின் பெயர் என்ன?
1) மடி 2) பறி 3) குல்லம்

33. இலங்கைக்கேயுரிய விலங்கினம் எது?
1) பண்டா 2) புலி 3) சருகுமான்




34. அருகிலுள்ள படத்தில் காட்டப்பட்டிருக்கும் எளிய உபகரண வகை எது?
1) நெம்புகோல் 2) சில்லும் அச்சாணியும் 3) கப்பி

35. காகத்தினால் சூழலுக்குக் கிடைக்கும் நன்மை எது ?
1) மண்ணை வளப்படுத்தல்
2) அழுக்குகளை அகற்றல்
3) பயிர்களுக்கு தீங்கு விளைவிக்கும் பூச்சிகளைப் பிடித்தல்

36. வேர்களிலிருந்து இனம் பெருகும் தாவரம்
1) கறிவேப்பிலை 2) றோசா 3) மாதுளை


37. இலங்கை தேசியக் கொடியில் தமிழ் மக்களை குறித்து நிற்கும் நிறம்
1) சிவப்பு 2) பச்சை 3) செம்மஞ்சள்

38. எருக்கலை, தாமரை, ஆடையொட்டி ஆகியவற்றின் வித்துகள் பரவலடையும் காரணிகள் முறையே
1) காற்று, நீர், விலங்கு
2) காற்று, விலங்கு, நீர்
3) நீர், காற்று, விலங்கு

Education கல்வி அதியாபன

39. புவியின் உபகோளாக விளங்குவது எது ?
1) செவ்வாய் 2) சந்திரன் 3) புதன்

40. இத் தையல் அலங்காரத்தின் பெயர் என்ன?
1) பெருநூலோடல்
2) சோம் தையல்
3) காக்காத் தையல்



41. கொத்தாகப் பூக்கும் பூவினம் எது ?
1) செவ்வரத்தை 2) ரோசா 3) சூரியகாந்தி

42. இலங்கையில் முதலாவது குளத்தைக் கட்டிய மன்னன் யார் ?
1) மகாசேனன் 2) பண்டுகாபயன் 3) பராக்கிரமபாகு


43. வற்றாளைக் கிழங்கில் அதிகளவில் காணப்படும் போசணைப் பொருள் எது ?
1) புரதம் 2) இலிப்பிட்டு 3)மாப்பொருள்

44. எதிரிகளிடமிருந்து தன்னைப் பாதுகாக்க ஒளியை வெளிவிடும் பிராணி எது?
1) மயிர்க்கொட்டி 2) மின்மினிப்பூச்சி 3) கரப்பான் பூச்சி


kalvi.lk

45. வீதி சமிக்ஞை படத்தில் காட்டப்படுகிறது. இதில் அம்புக்குறியால் காட்டப்படும் விளக்கின் நிறம்

1) சிவப்பு  2) செம்மஞ்சள்  3) பச்சை



46. பெருந்தெருக்களைக் குறிக்கும் ஆங்கில எழுத்து எது ?

1) A  2) B  3) E

47. தாவரப் பகுதிகளைப் பயன் படுத்திச் செய்யப்படும் ஒருபொருள்,

1) கடதாசி  2) பென்சில் கூர்  3) மட்பானை

48. பின்னவல யானைகள் சரணாலயம் அமைந்துள்ள மாவட்டம் எது?

1) குருநாகல்  2) கண்டி  3) கேகாலை

49. படத்தில் ஆரம்பத்திலுள்ள ஆணியைக் கழற்றுவதற்குப் பொருத்தமானது எது ?






(1)



(2)



(3)

50. விளக்குத்திரி வழியாக விரைவில் மேல்நோக்கிச் செல்லும் எண்ணெய் வகை

1) மண்ணெண்ணெய்  2) தேங்காயெண்ணெய்  3) பசுநெய்

Education கல்வி அதியாபன

51. பின்வரும் இலைகளில் இரண்டு ஒரே வடிவத்தை உடையன. வேறுபட்ட வடிவத்தை உடைய இலை எது ?

1) மிளகு  2) வெற்றிலை  3) வேம்பு

52. பின்வருவனவற்றுள் மூடாமல் சமைக்கும் பொருள் எது?

1) முருங்கையிலை  2) மரவள்ளி  3) கரட்

53. பின்வரும் பூக்களில் நறுமணம் வீசும் பூ எது ?

1) மல்லிகை  2) நந்தியாவட்டை  3) காட்டு மல்லிகை

54. ஆண்டுக்குக்கு ஒரு தடவை மட்டும் காய்க்கும் பழம்

1) வாழை  2) பப்பாசி  3) மரமுந்திரிகை

55. படத்தில் காட்டப்படும் குறியீட்டின் கருத்து எது ?

1) லொறி செல்லும் பாதை
2) லொறி மாத்திரம் உட்செல்லத் தடை
3) லொறி நிறுத்தத் தடை



56. சூரிய நமஸ்காரப் படிநிலைகளில் 3ஆம் படி நிலையைப் போன்ற படிநிலை எது

1) 11 ஆம் படிநிலை  2) 10 ஆம் படிநிலை  3) 12 ஆம் படிநிலை

57. பின்வருவனவற்றில் தேசிய அடையாளங்கள் அல்லாதது எது ?

1) நிறைகலசம்  2) நீலோற்பலம்  3) காட்டுக்கோழி



kalvi.lk

58. பின்வருவனவற்றுள் எது சூழல் நேயப் பூச்சிக்கட்டுப்பாட்டுத் திரவமாகும் ?
1) டெற்றோல் 2) நுளம்புத்திரி 3) வேப்பெண்ணெய்

59. பின்வருவனவற்றில் குயவன் பயன்படுத்தும் உபகரணம் எது ?
1) சாந்தகப்பை 2) வனைசில்லு 3) சீவுளி

60. எனது பாடசாலை மிகவும் சிறந்த பாடசாலை எனப்பலராலும் பாராட்டப்படுகின்ற ஒரு பாடசாலையாகும். பாடசாலையை நினைத்தாலே எனக்கு மிகவும் மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் இருக்கும். பாடசாலைக்குள் செல்லும் போதே ஒருவிதமான மனப்பூரிப்பும் புத்துணர்ச்சியும் ஏற்படும். ''நான் விரும்பும் பாடசாலை'' என்ற தலைப்பில் மூன்றுவாக்கியங்கள் எழுதுக. (ஒரு வாக்கியத்தில் ஐந்து சொற்களுக்கு குறையாமல் இடம்பெறல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்)

1) ……………………………………………………………………………………

……………………………………………………………………………………


2) ……………………………………………………………………………………

……………………………………………………………………………………

3) ……………………………………………………………………………………

……………………………………………………………………………………

Education கல்வி අධ්‍යාපන




# தரம் 5

# புலமை வித்தகன்

தரம் 5 மாணவர்களிற்கான யாழ்ப்பாணம் R.PRASANTHAN (PRI.TRD) ஆசிரியர் எழுதிய புலமைவித்தகன் மாதிரி வினாத்தாள்கள்.

📮 நாடு பூராகவும் CASH ON DELIVERY
( தபால்காரரிடம் விலை 1050/- செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும் )

**ORDER NOW**

**HOME DELIVERY**

075 287 1457

BUY BOOKS

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page